சுருக்கம்

மோட்டார் வாகனங்கள் – செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை – 2006–2007 பகுதி–2 திட்டத்தின் கீழ் புதியதாக 4 டெம்போ டிராக்ஸ் ஜுடோ வாகனங்கள் வாங்குதல் – செலவுத் தொகை ரூ.16.00 இலட்சம் ஒப்பளித்தல் – திருத்திய ஆணை வெளியிடப்படுகிறது.

---

செய்தி மற்றும் சுற்றுலா (நிர் 5)த் துறை

அரசாணை (நிலை) எண்.261 நாள் 7.11.2006

படிக்கப்பட்டது:

அரசாணை (நிலை) எண்.210, செய்தி மற்றும் சுற்றுலா (நிர் 5)த் துறை, நாள் 7.9.2006.

---

ஆணை:

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மாவட்ட அலுவலகங்களில் பயன்படுத்துவதற்காக 4 (நான்கு) டெம்போ டிராக்ஸ் ஜுடோ வாகனங்கள் ரூ.16.00 இலட்சத்தில் வாங்குவதற்காக நிலை நிதிக்குழு (Standing Finance Committee) ஒப்புதல் அளித்தபடி, 2006–2007 ஆம் ஆண்டின் பகுதி–2 திட்டத்தின் கீழ் வாங்க படிக்கப்பட்ட அரசாணையில் அனுமதியளிக்கப்பாபட்டுள்ளது. அதன்டிபடி, மேற்கூறியவாறு 4 புதிய டெம்போ டிராக்ஸ் ஜுடோ வாகனங்கள் வாங்குவதற்கு செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநருக்கு செலவுத் தொகையாக ரூ.16,00,000/– (ரூபாய் பதினாறு இலட்சம் மட்டும்) 2006–2007 ஆம் ஆண்டிற்கான பகுதி–2 திட்டத்தின் கீழ் முன்பணமாக ஒப்பளிக்க ஆணையிடப்பட்டுள்ளது.

2. முன்பக்கம் பத்தி 1–இல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவுத் தொகையில் ஒரு டெம்போ டிராக்ஸ் ஜுடோ வாகனத்தின் DGS & D விலை ரூ.3,87,116/– (ரூபாய் மூன்று இலட்சத்து எண்பத்தேழாயிரத்து நூற்று பதினாறு மட்டும்) என்ற வீதத்தில் நான்கு டெம்போ டிராக்ஸ் ஜுடோ வாகனங்கள் வாங்குவதற்கு மொத்தம் ரூ.15,48,464/– (ரூபாய் பதினைந்து இலட்சத்து நாற்பத்தெட்டாயிரத்து நானூற்று அறுபத்து நான்கு மட்டும்) முன்பணமாக தி/ள் ஃபோர்ஸ் மோட்டார்ஸ் லிமிடெட், புனே நிறுவனத்திற்கு வழங்குவதற்கும் மீதமுள்ள ரூ.51,536/– (ரூபாய் ஐம்பத்தோராயிரத்து ஐந்நூற்று முப்பத்தாறு மட்டும்) நான்கு டெம்போ டிராக்ஸ் ஜுடோ வாகனங்களின் அத்தியாவசிய உதிரி பாகங்கள், வாகனங்களின் பதிவு மற்றும் முதல் எரிபொருள் ஆகிய செலவினங்களை மேற்கொள்ள துணை இயக்குநர் (செய்தி) அவர்கள் கோரும் போது அவ்வப்போது முன்பணமாக வழங்குவதற்கும் கணக்கு அலுவலர் (செய்தி) அவர்களுக்கு அனுமதியளித்து ஆணையிடப்படுகிறது.

3. இத்தொகையினை தமிழ்நாடு நிதியியல் தொகுப்பு தொகுதி–1–இல் விதி 99–இன் கீழ் முன்பணமாக பெற்றுக் கொள்வதற்கு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை அவர்களுக்கு அனுமதியளிக்கப்படுகிறது. இதற்காக நிதித்துறையின் கடித எண்.136452/சம்பளம்/2008–1, நாள் 31.01.1981–இல் உள்ள விதிமுறைகள் ஒரு சிறப்பு நிகழ்வாக தளர்த்தப்படுகிறது.

//2//

4. மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கக்கப்பட்டுள்ள செலவுத் தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

"2220 – செய்தி விளம்பரம் – 60 ஏனையவை – 106 நேரிட விளம்பரம் – 1 மாநிலத் திட்டம். ஜே ஏ ஒருங்கிணைந்த நேரிட விளம்பரத் திட்டம் – 21 மோட்டார் வண்டிகள் – 01. வாங்குதல் (து.தொ.கு. 2220–60–ஜேஏ–22110)"

5. இந்த ஆணையை வெளியிடுவதற்கு நிதித்துறை தனது அலுவல் சாரா எண்.67195/செய்தி (மற்றும்) சுற்றுலா / 2006, நாள் 6.11.06 மூலம் ஒத்திசைவு அளித்துள்ளது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வெ.இறையன்பு,
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
மாநிலக் கணக்குத் துறைத் தலைவர், சென்னை 9/18.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், சென்னை–9.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், சென்னை–9.(பட்டியலுடன்)
கணக்கு அலுவலர் (செய்தி), செய்தி மற்றும் சுற்றுலாத் துறை, சென்னை–9.
(அவர்கள் மூலம்)
நகல்
தி/ள். ஃபோர்ஸ் மோட்டார், பூனா.
இயக்குநர்,
மோட்டார் வாகனங்கள் பராமரிப்புத் துறை, சென்னை–86.
உள்துறை, சென்னை–9.
நிதி (செய்தி (மற்றும்) சுற்றுலா) / (வ.செ.2)த் துறை, சென்னை–9.
கணக்கு அலுவலர் (செய்தி), சென்னை–9.
செய்தி மற்றும் சுற்றுலா (கணக்கு/வ.செ.)த் துறை, சென்னை–9.
இகோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்